## ஆவரங்கால் பகுதி அகதி முகாம்களில் குழந்தை, வயோதிபர் மரணம்

கோப்பாய் அகதி முகாம்களில் சிலவற்றில் சுகாதார வசதிகள் இல்லாததாலும் மருந்துகள் இல்லாத காரணத்தினாலும் முகாம்களில் உள்ள மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது அம் முகாம்களில் உள்ள மக்கள் போதிய மல சல கூட வசதி இன்றி பெரும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை முகாமில் ஒரு வயோதிபரும், ஆவரங்கால் மகாஜன வித்தியாசாலை முகாமில் ஒரு குழந்தையும் —04பக்கம் பார்க்க

## முன்னாள் இ.தொ.க.மாவட்ட தலைவர் தமிழ்த் தீவிரவாதி என கைது

பதுளைப் பகுதியில் தமிழ்த்தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் கைது செய்யப்பட்டது தொடர்பாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும் இ.தொ.க. பொதுச்செயலாளருமான எம் எஸ். செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது கைதானவர்களில் சிலர் மட்டக்களப்பு பகுதிக்குச் சென்று தீவிரவாதிகளுடன் பயிற்சி பெற்றுத் திரும்பியதாக பாதுகாப்பு அமைச்சின் — 04 ஆம் பக்கம் பக்கம்

பக்கங்கள் நாலு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 06 ஒலி 27 பிரசோற்பத்தி மார்கழி 09 (24-12-1991) செவ்வாய்

## லலித்கட்சிக்கு ஆட்சேர்த்தவர் கண்டியில் மர்ம மறைவு

அத்துலத் முதலி, காமினிதிசநாயக்கா குழுவினரின் ஐக்கியதேசிய ஜனநாயக முன்னணியில் பலரைச்சேர்த்த ஜீ. பிரேமகுமார என்பவர்கண்டியில் காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது. இம்மாதம் 13ஆம் திகதியிலிருந்து இவரைக்காணவில்லை என்று கண்டிமாவட்ட சுதந்திரக் கட்சி எம் பி லக்ஷ்மன் கிரியால பாராளுமன்றத்தில் கூறினார். ஏற்கனவே நீர்கொழும்பில் நடைபெற்ற இந்த முன்னணிக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவரும் காணாமல் போய் பின்னர் மர்மமான முறையில் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. காணாமல் போன பிரேமகுமார ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தே பலரைச் சேர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 10

# அரசியல் தீர்வு காண்பதற்கு முன்

# இராணுவ ஆதிக்கம் ஏற்படுத்த முனைப்பு

### புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள்மீது தாக்குதல் முஸ்தீபு

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்பாக இராணுவ ஆதிக்கம் ஒன்றை இப்பகுதிகளில் உருவாக்க ஸ்ரீலங்கா இராணுவம் எண்ணியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்று தெரிவித்தன.

வடக்கு கிழக்குப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வுகாணும் முயற்சிகள் மீண்டும் துளிர்விட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தனது பிடியை தளர்த்துவதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்பாக ஸ்ரீலங்கா இராணுவம் தனது மேலாதிக்கத்தை காட்டிக்கொள்வதற்காக தற்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்கள் மீது தாக்குதல் நடத்துவதில் முனைப்பாக இருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

### போக்குவரத்து விதிகளை மீறிய இளைஞர் யுவதிகள் மீது காவல்துறை விசாரணை

யாழ் நகர வீதிகளில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிச் சென்ற பல இளைஞர்களும் யுவதிகளும் தமிழீழ காவல்துறையினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

பிரதான வீதி, பஸ் நிலையப்பகுதி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி ஆகிய இடங்களில் இவர்கள் வீதிப் — 04 ஆம் பக்கம் பார்க்க

### வலந்தலை இராணுவம் தாக்கி அபிவிருத்தி நிறுவனம் சேதம்

காரைநகர் வலந்தலையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 10 மணியளவில் வட்டுச்கோட்டைப் பக்கமாக மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியில் உள்ள வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன வலைத்தொழிற்சாலை பெரும்சேதத்திற்குள்ளானது. — 04ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர்களின் பெயர்கள் வானொலியில் தவறாக ஒலிபரப்பு

'சார்க்' மாநாடு தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேர்முக அஞ்சலி செய்த போது வெளிவிவகார அமைச்சர் ஹமீத் எனவும், காணி அமைச்சர் தயாரத்தின எனவும்' அறிவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

அறிவிப்பாளருக்கு பிழை —04 ஆம் பக்கம் பார்க்க

### 'சாவ்' விளையாட்டுப் போட்டி

### 8 தங்கப் பதக்கம் பெற்று ஸ்ரீலங்கா அணி முன்னணியில்

கொழும்பில் நடைபெறும் சாவ் விளையாட்டுப் போட்டியில் இதுவரை ஸ்ரீலங்கா அணி 8 தங்கப்பதக்கங்களை பெற்றுமுன்னணியில் உள்ளது. இந்தியா இரு தங்கப்பதக்கங்களையும் பாகிஸ்தான் ஒரு தங்கப்பதக்கத்தையும் பெற்று முறையே இரண்டாவது மூன்றாவது இடங்களில் நிற்கின்றன.

### மதுரையில் திராவிட இயக்க 75 ஆம் ஆண்டு விழா

திராவிட இயக்கம் தோற்றுவிக்கதின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன் ... சுமார் 5 இலட்சம் தி. மு. க. தொண்டர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

### வவுனியா குருமன்காடு பக்கமாக படையினர் சூடு

### வில்லி வில்லி கப்பல்

## பக்கமாக படையினர் சூடு

வவுனியாவில் நேற்றும் இராணுவத்தினரின் தாக்குதல் தொடர்ந்தது.

நேற்று முன்தினம் புதுவீதி வழியாக சென்ற படையினர் குருமன்காடு பகுதியில் காவலரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதே சமயம் படையினர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் மணி வீரச்சாவு

நேற்று முன்தினம் திருமலை மாவட்டத்தில் தோப்பூர் முகாமிலிருந்து ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் அணி ஒன்று தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் இராணுவம் மூன்று படையினரை இழந்தது.

புலிகள் தரப்பில் மேஜர் மணி (பொ. சங்கரலிங்கம் மூதூர்) வீரச்சாவு அடைந்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 'வீவா' போத்தலினுள்

## பற்றரி கடத்திய நபர் கைது

வீவா போத்தலினுள் பென்ரோச் பற்றரி கடத்திவந்தவர் வவுனியாவில் படையினரிடம் சிக்கிக்கொண்டார்.

கொழும்பிலிருந்து வீவா சுவையூட்டப்பட்ட பால் போத்தலின் மூடியைத் திறந்து அதன் உள்ளே இருந்த ஜேபலையும் அகற்றி

—04 ஆம் பக்கம் பார்க்க

திராவிட இயக்கம் தோற்றுவித்ததின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் மதுரையில் தி.மு.க. வினரால் கொண்டாடப்பட்டது.

சுமார் 5 இலட்சம் தி.மு.க. தொண்டர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் பயங்கரவாத தடைச்சட்டத்தை

—04 ஆம் பக்கம் பார்க்க

### அச்சுவேலி, வளலாய், இடைக்காடு பகுதியில்

## இடம் பெயர்ந்தவர்களுக்கு

## 2-வது இலவச உலர் உணவு

இராணுவ நடவடிக்கையால் அச்சுவேலிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு இரண்டாவது இலவச உலர் உணவு வழங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கான அனுமதியை யாழ் செயலகம் வழங்கியுள்ளது.

இந்த உலர் உணவு பத்தை மேனி, வளலாய், தம்பாலை கதிரிப்பாய், இடைக்காடு அச்சுவேலி மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவைச்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வில்லி வில்லி கப்பல்

## நேற்று பருத்தித்துறை வந்தது

வில்லி வில்லி கப்பல் கொழும்பிலிருந்து நேற்றுமுன் தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் தபால் பொதிகள், யாழ் போதனா வைத்தியசாலைக்கான சில பொருள்கள், தனியார் வர்த்தகங்களுக்கான பொருள்கள் என்பன வந்துள்ளன.

இக்கப்பலில் தனியார் வர்த்தா

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெந்தல மா கப்பலும்

## பருத்தித்துறை துறைமுகம் வந்தது

திருமலைக்குச் சென்ற ஹெந்தல என்ற மாக்கப்பல் மீண்டும் பருத்தித்துறைக்கு நேற்று காலை வந்து சேர்ந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்களையும், யாழ் கல்விப் பணிப்பாளர் இராசசுந்தரலிங்கம் யாழ் அரச அதிபர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் விவசாயிகளுக்கு

## மண்ணெண்ணெய் வழங்கல்

கோப்பாய் பகுதியில் கெயர் யுஎஸ் உதவித் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள 350 விவசாயிகளுக்கு நாளை புதன் இழமை மண்ணெண்ணெய் வழங்கவிருப்பதாக கோப்பாய் மக்கள் நலன் காக்கும் சங்கச் செயலாளர் எஸ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் வெங்காயம் தெற்கிற்கு செல்லவில்லை;

# இறக்குமதிக்கு பெரும்பணம் செலவு!

அரசு மீது சபையில் கண்டனம்

வடக்கில் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படும் மிளகாய், வெங்காயம் என்பன குழப்ப நிலை காரணமாக தெற்கிற்குச் செல்லாததினால் அரசு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை இலங்கை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யச் செலவிடுவதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இதற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினர்.

எந்த மக்கள் வடக்கில் வியர்வை சிந்தி உழைத்து நீரைப்பாய்ச்சி வெங்காயம், மிளகாயை உற்பத்தி செய்தார்களோ அந்த மக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் தற்பொழுது இரத்தத்தைச் சிந்துகிறார்களெனவும் சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

## நுரளையில் தமிழ்த் தம்பதி கழுத்து நெரித்துக் கொலை!

நுவரேலியா பகுதியில் பொரலந்த எல்ற இடத்தில் வீட்டிலிருந்த தமிழ்த் தம்பதி கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

நடேசன் கணேசன் (42), ராஜு கிருஷ்ணவேணி (38) ஆகிய தம்பதியரே கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களின் வீட்டிலிருந்த தங்க நகைகள், பணம், டெக் என்பன சூறையாடப்பட்டுள்ளன. (22)

## புதிதாக உப-தபாலகங்கள் இனித் திறக்கப்படாது!

நாட்டில் இனிமேல் புதிதாக உப-தபாலகங்கள் திறக்கப்படமாட்டாதென தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த உப-தபால் நிலையங்களால் தபால் திணைக்களத்திற்குப் பெருமளவு நஷ்டம் ஏற்பட்டு வருவதினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ளம் தணிகிறது

கிழக்கில் அடைமழை ஓய்ந்து, வெள்ளம் வடிந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனால் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியிருந்தோர் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பி வருகிறார்கள்.

## 'ஆரபி' இராகம் 'அறபி' யானது! தமிழ்சேவையிலும் தமிழ் கொலை!

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையிலேயே இப்போது 'தமிழ்க் கொலைகள்' தாராளமாக இடம் பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழ் மொழி மூலமான அறிவிப்புக்களிலும் நிகழ்ச்சிகளிலும் பல தமிழ்ச் சொற்கள் தற்பொழுது சில அறிவிப்பாளர்களினால் அடிக்கடி பிழையாக உச்சரிக்கப்படுகிறதாம்.

குறிப்பாக காலையில் ஒலிபரப்பாகும் 'செய்தித்தாள் கண்ணோட்டம்' நிகழ்ச்சியில் ஒரு சில அறிவிப்பாளர்களின் தமிழ் உச்சரிப்பை விளங்கிக் கொள்ளவோ, பொறுத்துக் கொள்ளவோ முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கர்நாடக இசை நிகழ்ச்சியொன்றில் சில தினங்களுக்கு முன்னர் 'ஆரபி' என்ற இராகம் 'அறபி' என்று பிழையாகக் கூறப்பட்டது. அது மட்டுமல்ல தாளத்தின் பெயரை இராகத்துக்கும் இராகத்தின்பெயரைத்தாளத்துக்கும் மாறி அறிவிப்புச் செய்தார் தமிழ் மொழி மூல அறிவிப்பாளர் ஒருவர்.

வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் அறிவிப்பாளர்கள் பலர் ஒதுக்கி வைக்கப்பட்டு, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட, தமிழைச் சரியாக பேசவோ, உச்சரிக்கவோ முடியாதவர்களுக்கே இப்போது தமிழ்ச்சேவை ஒலிபரப்பில் அதிக சந்தர்ப்பம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 16 பேர் வவுனியாவில் கைது!

தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு வந்தார்களென்ற குற்றச்சாட்டின்பேரில் 16 பேர் வவுனியா சோதனை முகாமில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுளனர்.

இவர்கள் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மாயமாய் மறைந்த மண்ணெண்ணெய்

\- எஸ். ஜி. எம்.

19. 12. 91 முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 38/- என செயலக அதிகாரிகள் கூட்டம் கூடி அறிவித்ததும் போதும், வலிகாமம் பகுதியிலுள்ள சகல மண்ணெண்ணெய் விற்பனையாளர்களது இருப்பும் 'விற்று முடிந்து விட்டது'!

இருப்பும் காலி, போத்தலும் காலி. வெற்றுப் போத்தல்களே காட்சி.

மண்ணெண்ணெய் இருப்புக்கு திடீரென என்ன நடந்தது என மக்கள் அங்கலாய்த்தனர். மாயமாய் எங்கே மறைந்தது என்று ஆராய்ச்சியும் செய்தனர்.

தென்மராட்சிப் பகுதியில் கடைகளில் விற்பனை நடைபெற, வலிகாமத்தில் மட்டும் ஏன் இல்லை? அங்கு விலைக்கட்டுப்பாடு இல்லையா அல்லது இங்கே இருப்பு இல்லையா என அறிய முடியாமல் மக்கள் தலையைப் பிய்த்துக் கொண்டனர்.

விலைக்கட்டுப்பாடு என்றதும் மண்ணெண்ணெய் வியாபாரிகள் தமது இருப்புகளை மறைத்து விட்டனர் என்றே தோன்றுகின்றது. (பதுக்கல் என்று கூற முடியாது போல உள்ளது.)

வியாபாரத்துக்கு இருப்பவர்கள் இருப்பை மறைப்பதானால் அவர்களுக்கு ஏதோ பிரச்சினை இருப்பது தெரிகிறது. ஒருவேளை நிர்ணயித்த விலை கட்டுப்படியாக இல்லாது இருக்கலாம் முதலாளிகளின் முடிவு சிறு கடைக்காரர்களின் பிரச்சினைகளைக் கவனத்திற் கெடுக்காததாயும் இருக்கலாம்

ஆக எங்கோ குறையோ அல்லது குறைபாடோ நடந்து விட்டது தெரிகிறது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் எம்மவரே. அப்படியிருக்க இப்படி நிழற்சண்டை ஏன் என்றுதான் புரியவில்லை.

தாம் பாதிக்கப்பட்டதாக வீதியோர வியாபாரிகள் [illegible]

## இரு தமிழ் இளைஞர்கள் அம்பாறையில் கடத்தல்

அம்பாறை மத்திய முகாம் கல்லோயா குடியேற்றக் கிராமத்தில் வீதியால் சென்ற தமிழ் இளைஞர்கள் இருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரும், ஊர்காவல் படையினரும் இக்கிராமத்திற்கு வந்து சென்ற பின்னர் மேற்படி இருவரும் காணாமற்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரே இருவரையும் அழைத்துச் சென்றதாக நேரில் கண்ட கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் பொலிஸார் தாம் கைது செய்யவில்லை என மறுத்துவிட்டனர். (22)

## புதிய எரிபொருள் முகவர்களை நியமிக்கக் கட்டுப்பாடு

எரிபொருள் நிரப்பும் இயந்திரங்களைத் தாமாகவே கொள்வனவு செய்வோரே இனிமேல் புதிதாக எரிபொருள் முகவர்களாக நியமிக்கப்படுவார்களென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

தற்பொழுது 690 முகவர் எரிபொருள் விற்பனை நிலையங்களும், 250 கூட்டுத்தாபன எரிபொருள் விற்பனை நிலையங்களும் நாட்டிலுள்ளன.

இந்த நிலையங்களுக்கான எரிபொருள் நிரப்பும் இயந்திரங்களைக் கூட்டுத்தாபனமே வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

கைதடி வடக்கில் ஐந்து வீட்டுத் திட்டத்திற்கு முன்பாக உள்ள இரு பக்கமும் தெரு வசதியுள்ள வற்றாக் கிணறு இருக்கும் 6 பரப்பு 7.75 குழி காணி விற்பனைக்கு உள்ளது. குடியிருப்பதற்கோ, வியாபார நிலையம் அமைக்கவோ ஏற்ற சூழ்நிலையுளளது. விபரங்களை 'தேவ வளவு' கைதடி வடக்கு, கைதடியில் விசாரிக்கலாம்.

12074

## ஆசிரியர் தேவை

அரசியல் விஞ்ஞானம் கற்பிப்பதற்குப் போதனாசிரியர் தேவை

தகுதி: பட்டதாரி ஆசிரியர் அல்லது க.பொ.த. உயர் தரத்தில் அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

தலைமைச்செயலகம்
விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி
தமிழீழம்

(கலட்டி, யாழ் பல்கலைகழக மருத்துவபீடம் முன்பாக)

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:— 15.01.1992

12075

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 —



மறைவு 25 —

தாம் பாதிக்கப்பட்டதாக வீதியோர வியாபாரிகள் கருதினால் உரியவர்களுடன் உடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளைக் கூறி அதற்கு தீர்வு காண முயன்றிருக்க வேண்டும்.

அதே போல தீர்மானம் எடுத்தவர்களும் அதிகாரக் கைப்பிடியை விட்டுவிட்டு சிறு பிரச்சினைகளை வலிந்து சென்றறிந்து தீர்வுகாண முயன்றிருக்க வேண்டும்.

இரு பகுதியினரும் உடன் சந்தித்திருக்க வேண்டும். பிரச்சினைபற்றி மக்கள் நலனை முன் வைத்து சிந்தித்திருக்க வேண்டும் தீர்வு கண்டிருக்க வேண்டும், அப்பொழுது மீண்டும் மண்ணெண்ணெய் சந்திக்கு வந்திருக்கும்.

லீற்றர் ரூபா 140/- 110/- என்றிருந்த விலை ரூபா 55/. வரை குறைந்தது போல இயல்பாகவே விலை குறையும் நிலையை இரு தரப்பினரும் தோற்றுவிக்க வேண்டும்.

ஒருவாறாக "கட்டுப்பாட்டு விலை" மண்ணெண்ணெய்க்கு நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு விட்டது. ஆனால் இப்படியான பரிசோதனை ஆராய்ச்சிகள் வேறு பொருள்களுக்கும் தொற்றாமல், தொடராமல் இருக்கும் என நம்புவோமாக!

திரங்களைக் கூட்டுத்தாபனமே வழங்கிப் பராமரித்து

யில் விசாரிக்கலாம்.

12074

# அறிவித்தல்

## வ. இ. ச. சபைப் பரீட்சைகள் - 1992

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் 24 - 12 - 1991 செவ்வாய் தொடக்கம் வ. இ. ச சபைப்பணிமனையில், காரியால நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை ரூபா பத்து. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 31 - 01 - 1992 வெள்ளிக்கிழமைவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத் தலைவரும்.

12073

7 — 69



12 — 88

## செல்வராசா பரிதரன்

எங்கள் அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
எம்மைக் கவர்ந்த எங்கள் பாலவண்ணா
நீ எம்மைப் பிரிந்து ஆண்டு மூன்று
ஆகினும் 'வண்ணம்' என்றசொல் எங்கள் நெஞ்சைவிட்டு மாறாது - உங்கள் அன்பை நினைந்து உருகும்

பெற்றோர்,
செ. அம்மன்கிளிகுடும்பத்தினர்.

வாடி ஒழுங்கை
ஆதிகோவிலடி
வல்வெட்டித்துறை.

12059

● எம்பிலிப்பிட்டிய இராணுவ முகாமில் வைக்கப்பட்ட

# 46 இளைஞர்களின் நிலைபற்றி

சர்வதேச மன்னிப்புச்சபை

# விளக்கம் கேட்கிறது!

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எம்பிலிப்பிட்டி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 46 இளைஞர்களின் இன்றைய நிலை குறித்து அறிவித்தருமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

1987 இன் இறுதிப் பகுதிக்கும் 1990 இன் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் இந்த 46 இளைஞர்கள் இன்னும் காணப்படவில்லை.

இவர்கள் குறித்த தகவல் எதுவும் இதுவரை உறவினர் காதுகளுக்கு எட்டவில்லையெனவும் அவர்களில் பெரும்பாலானோர் தென்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மணவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 'எம்காவிரி எமக்கே' நூறு வருடத்தகராறு அது!

தமிழக அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் இடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இந்திய மத்திய அரசை சிக்கலில் மாட்டவைத்துள்ள காவிரி நீர் பிரச்சினை இன்றுநேற்று ஏற்பட்டதல்ல-நூறுவருடத்தகராறு அது.

மத்திய அரசை 'மதில் மேல் பூனை'யாக வைத்திருக்கும் காவிரி பிரச்சினையின் வரலாற்றுக் குறிப்பு கீழே-

1892-: மைசூர் அரசு காவிரியிலோ, அதன் துணை நதிகளிலோ அணை கட்ட விரும்பினால் சென்னை மாகாண அரசின் அனுமதி பெறவேண்டும். என்று ஒப்பந்தம் ஏற்பட்டது.

1911-: மைசூர் அரசு ஒப்பந்தத்தை மீறியது.

1913 - 1916;- மைசூர் அரசை எதிர்த்து இங்கிலாந்துவரை பல்வேறு கோர்ட்டுகளில் வழக்கு

1924:- புதிய ஒரு ஒப்பந்தம்

1968:- ஒப்பந்த மீறல் குறித்து மாநில அரசுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள்.

1971:- உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு

1972:- பிரதமரின் அறிவுரைக்கு இணங்கி தமிழ் நாடு அரசு வழக்கைத் திரும்பப் பெற்றது.

1975 1986: பலதரப்புப் பேச்சுவார்த்தைகள்.

1983:- உச்ச நீதிமன்றத்தில் தஞ்சை விவசாயிகள் வழக்கு

மே 1990:- நடுவர் மன்றம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

ஜூன் 1990:- நடுவர் மன்ற அமைப்பு

ஜூன் 1991:- இடைக்கால உத்தரவு

## அருட் சகோதரர் காலமானார்

யாழ்கோவில்வீதியிலுள்ள அருள் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த தோலகட்டி செபமாலைதாசர் சபைத் துறவியான அருட் சகோதரர் ஈ. ஏ. டீ. கலின்ரன் அடிகள் 73 ஆவது வயதில் காலமானார்.

அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த இவர் 1953 இல் தோலகட்டி ஆச்சிரமத்திற்கு வந்து துறவியானார். (43)

## இறந்தோர் தொகை அதிகரிப்பு

டில்லி செங்கோட்டையில் கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இறந்தோரின் தொகை நான்காக அதிகரித்துள்ளது.

மேலும் அச் சம்பவத்தில் காயமடைந்த 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உள்ளூர்க் கலைஞர்களுக்கு கனடிய புலமைப் பரிசில்!

வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்த கலைஞர்களுக்கு கனடிய பல்கலைக்கழகமொன்று மூன்று மாதகால புலமைப் பரிசிற்கல்வியை வழங்கவுள்ளது

கனடாவிலுள்ள பிரிட்டிஷ் - கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கலைஞர்களுக்கான 'அன்றா' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 1992 - 93 கல்வியாண்டுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

சங்கீதம், நாடகக்கலை, சித்திரம், சிலை அமைப்பு, வர்ணம் பதித்தல் கலை, எழுத்துத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் சான்றிதழ் சமர்ப்பித்து புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்படுகின்றது.

## தாண்டிக் குளத்தைத் தாண்ட புதன்வரை அனுமதியில்லை!

வவுனியாவுக்கு வடக்கே இராணுவக்கட்டுப்பாட்டு எல்லையை மேலும் விஸ்தரிப்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன் பொருட்டு தாண்டிக் குளத்திற்கு வடக்கே உத்தியோகம் பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும், நான்கு தினங்களுக்கு அப்பகுதிக்கு எவரும் செல்ல முடியாது எனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் ஒலிபரப்பி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதனால் வடபகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், மறு அறிவித்தல்வரை வவுனியா-தாண்டிக்குளம் வாகன சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது

## 1000 கைதிகள் விடுதலை

தந்தாரி தினத்தை முன்னிட்டு ஆயிரம் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

## ஈராக் மக்களுக்காக ஜேர்மன் பெண் உண்ணாவிரதம்

ஈராக் மீதான உலகப்பொருளாதாரத்தடையை நீக்கக் கோரி 14 நாள்களாக உண்ணாவிரதமிருந்த 23 வயதுடைய ஜேர்மன் பெண்ணிடம் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளுமாறு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெயினின் கேட்டுக்கொண்டார்.

ஈராக் மீதான தடைநீக்கப்படும் வரை உண்ணாவிரதத்தை தொடரப் போவதாகக் கூறியிருந்தார் இப்பெண்,

'உங்களின் மிக மோசமான உடல் நிலையை வானொலிச் செய்தி மூலம் கேள்விப்பட்டு ஈராக் மக்கள் அழுதனர். உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளுமாறு ஈராக் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்' என்ற ஜனாதிபதி ஹுசெயினின் கடிதத்தைக் கண்டதும் தனது போராட்டத்தை அந்த ஜேர்மன் பெண் கைவிட்டார். (22)

## ஐ.நா. அவதானிப்புக் குழு மீது யூகோஸ்லேவியாவில் தாக்குதல்

யூகோஸ்லேவியாவில் உள்நாட்டுப் போரை அவதானிக்கச் சென்ற ஐக்கியநாடுகள் சபை அவதானிப்புக்குழு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

யூகோஸ்லேவியாவுக்கு ஐ.நா. அமைதிப் படையை அனுப்புவது குறித்து ஆராயச் சென்ற குழுமீதே தாக்குதல் நிகழ்த்துள்ளது.

- நேற்றைய தொடர்ச்சி

## தமிழ்ப் பாதுகாப்பு முயற்சிகள்

### தனித்தமிழைக் கையாளல்

1915 ஆம் ஆண்டிலே தேசபக்தர் சுப்பிரமணியசிவா 'ஞானபாநு' இதழில் தனித்தமிழ்க் கட்டுரைப் போட்டிக்கான முன்னறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார் இப் போட்டியில் பரிசு பெறுவோருக்கு ரூபா ஐந்து வழங்குவதாகவும் அறிவித்திருந்தார். கட்டுரைக்கான கட்டுப்பாடு பின்வருமாறு:-

''சம்ஸ்கிருதச் சொல்லாகிய 'கஜம்' திரிந்து தமிழில் 'கயம்' என்றாயிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப்படுத்தலாகாது. சுருக்கத்தில் எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்கள் உபயோகிக்கப்படவேண்டும்.''

இந்தக் கட்டுப்பாட்டுப்பந்தியிலேயே உபயோகப்படுத்தல், பாஷை, சம்பந்தம் என்ற வடசொற்கள் பயின்று வருவதனை நோக்குகையில் அக்காலத்தவர் வடசொல், தமிழ்ச் சொல் என்று வேறுபடுத்தி உணரமுடியாத அளவிற்கு வடமொழியின் செல்வாக்குத் தமிழைப் பற்றிப் பிணித்திருந்தது என்றே சொல்லத் தோன்றுகின்றது, எனினும் சுவாமி விருத்தாசலம் என்ற ''மறைமலையடிகள்'' சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற ''பரிதிமாற்கலைஞர்'' பாலசுந்தரம் என்ற ''இளவழகனார்'' முதலான தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டிலே தனித்தமிழுக்கு உரை நடையின் வாயிலாக அந்த இயக்கத்திற்கு உயிரூட்டினர். திரு வி.கலியாண சுந்தரனார், வ. உ. சிதம்பரம்பிள்ளை, பேராசிரியர் மு வரதராசனார் முதலானோர் முற்றிலும் வடமொழிச் சொற்களை நீக்காதவிடத்தும், இயன்ற அளவு தனித் தமிழ்ச் சொற்களைக் கையாண்டு தூய தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்தனர். ஈழத்தில் இளமுருகனார், வேந்தனார் ஆகியோர் தனித்தமிழ் உரை நடைக்கு வழி வகுத்தவர்கள் என்ற வகையில் நினைவு கூரத்தக்கவரே.

### ஆங்கில மேலாண்மையும் தமிழ்ப் புறக்கணிப்பும்

நரியுயிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
நாயெனத்திரிவொற்றர் உணவினைப்
பெரிதெனக்கொளுந் தம்முயிர் விற்றிடும்.
பேடியர் பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடும்
கலை......

என்று ஆங்கிலக் கல்விப் பயிற்சியினைப் பாரதி சாடும் அளவிற்கு அதன் மேலாண்மையும் பயன்பாடும் அவன் காலத்தில் இருந்தன.

தமிழ்ப்பித்தன்

புத்தம் புதிய கலைகள்- பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே- அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை-அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்

என்று பேதை ஒருவன் உரைத்ததாக வேதனை கொண்டு கூறிய பாரதி, தமிழ் அன்று தாழ்வுற்றிருந்த நிலையினையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'

என்ற தன் பேரவாவினையும் அவன் புலப்படுத்தினான்.

அனைத்து கவலையும், வெகுளியும் நீங்கக்கூடிய அளவிற்கு அவன் மறைந்து எழுபது ஆண்டுகள் ஆகியும் நாம் பெரிதாக என்ன செய்து விட்டோம்? எமது 'திறமான புலமை' யினை வெளிநாட்டார் வணக்கம் செய்யும் அளவிற்கு நாம் நிகழ்த்திய சாதனைகள் எவை? இன்றும் தமிழைத் தாழ்த்தியும் ஆங்கிலத்தை ஏற்றியும் பேசுவதோடு நிறைவு காண்பவர் எம்மிடையே முற்றாக மறைந்து விட்டனரா? இந்தக் கேள்விகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைப்பது கடினமே.

## 'பண்டைய தமிழகம்' நூல் பல்கலைக்கழகத்தில் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி க, சிற்றம்பலம் எழுதிய 'பண்டைய தமிழகம்' என்னும் நூல் வெளியீட்டு விழா கைலாசபதி கலை அரங்கில் 26-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ் வெளியீட்டு விழாவில் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி அவர்களது ஆசியுரையும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளையினது வெளியீட்டுரையும், பேராசிரியர் வ.ஆறுமுகத்தின் மதிப்பீட்டுரையும இடம்பெறஉள்ளன.

பின்னர் சங்கீத வித்தகர் துளசிமனோகரி திருநாவுக்கரசின் புல்லாங்குழல் இசையும், சங்கீத பூஷணம், பண்ணிசைப் புலவர் திரு.நா. வி.மு நவரத்தினம் அவர்களின் சங்கீதக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

### சவர்க்காரம், சைக்கிள் ரயர் ரியூப் உட்பட

# நாலு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள்

# குமண கப்பலில் வடக்கே வர ஏற்பாடுகள்

யாழ் மாவட்டப் பல நோ. கூ. சங்கங்கள் தமது சொந்தப் பணத்தில் கொழும்பில் கொள்வனவு செய்த உணவுப் பொருள்களும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் கப்பல் மூலம் இம்மாத இறுதி வாரத்தில் பருத்தித்துறையை வந்தடையவுள்ளன

''மேர்ஸ் குமண'' என்ற கப்பலில் கடந்த பதினெட்டாம் திகதி முதல் பொருள்களை ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நமது கொழும்பு நிருபர் அறிவித்துள்ளார்.

நான்கு கோடி ரூபா பெறுமதியான இப் பொருள்களில் 315 மெ. தொன் அரிசி, 180 மெற்றிக்தொன் மா, 135 மெற்றிக் தொன் சீனி, 45 மெற்றிக் தொன் தானிய வகைகள், 45 மெற்றிக் தொன் பருப்பு வகைகள், 135 மெற்றிக் தொன் சவர்க்காரங்கள் ஆகியனவும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், சைக்கிள் ரயர்கள் ரியூப்கள், கால்நடைகளுக்கான உணவு வகைகளைத் தயாரிக்கும் பொருள்கள் ஆகியனவும் ஏற்றப்படுகின்றன.

யாழ் அரச அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பல நோ. கூ. சங்கங்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக எடுத்த நடவடிக்கையின் பலனாக கடல் மார்க்கமாக பொருள்களை அனுப்பும் இம்முயற்சி வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பூரண ஆதரவு வழங்குவதுடன் கூட்டுப்படைத் தலைமையலுவலகமும் அனுமதி வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (45)

## நிதி பற்றாக்குறையினால் பொருள்களை ஏற்றதாமதம்

யாழ் மாவட்டத்திலுள்ள சில பல நோ. கூ. சங்கங்கள் கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாக பொருள்களை யாழ் மாவட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பு வழங்காததினால் எதிர்பார்க்கப்பட்டதும் அனுமதிக்கப்பட்டதுமான தொகை அளவு பொருள்களைக் கப்பலில் ஏற்ற முடியாதிருப்பதாக இச் சங்க வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

போதிய நிதிவளம் கொண்ட சில சங்கங்கள்கூறிய தொகைப் பணத்திற்கு மட்டுமே பொருள்களைக் கொள்வனவு செய்து கப்பலுக்கு ஒப்படைத்துள்ளதாகவும் யாழ் மாவட்டத்திலுள்ள சுமார் பதினைந்து சங்கங்கள் இக் கூட்டு முயற்சியில் பங்கு கொள்ளவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரண்டாம் படிச் சங்கங்களான மீன்பிடிச் சங்கம், நெசவாளர் சங்கம், திருநெல்வேலி பாற்பண்ணைச் சங்கம் ஆகியனவும் இக்கப்பலில் தமக்குத் தேவையான பொருள்களை ஏற்றியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (45)

## கர்நாடக வன்முறைக்கு ஜெயலலிதா நஷ்டஈடு கேட்கிறார்

அண்மையில் தமிழ் நாட்டு மக்களுக்கெதிராகக் கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற வன்முறைகளுக்காக மத்திய அரசும் கர்நாடக அரசும் நஷ்டஈடு தரவேண்டுமென தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

புதுடில்லி சென்றுள்ள ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போது கர்நாடகத்தில் தமிழகத்தவர்களுக்கெதிராக வன்முறைகள் குறித்த புகைப்படங்களையும் அவர் நரசிம்மராவிடம் சமர்ப்பித்தார்.

## மருத்துவபீடத்துக்கு உடல் ஒப்படைப்பு

அரியாலையில் மரணமான ஒருவரது உடல் வைத்தியத் துறை மாணவர்கள் பயில்வதற்காக யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கலைமகள் வீதி அரியாலையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கந்தசாமி என்பவரது உடலே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது.

தான் இறந்ததும் தனது உடலை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைத்து உடற்றுறை சம்பந்தமான ஆய்விற்கு அதனை உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பல்கலைக் கழகத்துக்கு அறிவித்து பல்கலைக்கழகத்திடம் இருந்து இதற்கான அனுமதியையும் இவர் பெற்றிருந்தார்.

அதன் அடிப்படையில் அவர் இறந்ததும் இறுதிக்கிரியைகள் எல்லாம் அவரது வீட்டிலேயே நடாத்தப்பட்டு அவரது உறவினர்களால் அவரது உடல் நேற்று யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 25

## மணலாறு நூல் வெளியீடு

மணலாறு விஜயனின் மணலாறு நூல் வெளியீட்டுவிழா நாளை காலை 10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்னாள் மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவின் வெளியீட்டுரையை யோகி நிகழ்த்துவார்

## கிறிஸ்மஸ் விருந்தில் புரியாணி உட்கொண்ட 100 பெண்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

சீதுவையில் உள்ள பிடவைத் தொழிற்சாலையில் பணிபுரியும் நூறு பெண்கள் 'புரியாணி' சாப்பிட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் உட்கொண்ட புரியாணிக்கு பயன்படுத்திய கோழி இறைச்சியில் நச்சுத் தன்மை இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

கிறிஸ்மஸ் விருந்து உபசாரத்தில் இந்த புரியாணி பரிமாறப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (10)

## புதிய 100 ரூபா

புதிய 100 ரூபா தாள்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது. இது இப்போதுள்ள நூறுரூபா தாளை விட சிறியது எனத் தெரிவிக்கப்படுகிறது 143 மில்லிமீற்றர் நீளமும், 711 மில்லிமீற்றர் அகலமும் கொண்டதாக இத்தாள் இருக்கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

---

### மேஜர்...

தார்.

மேஜர் மணி 1985 இல் விடுதலைப் புலிகளில் இணைந்து கொண்டவர். கடந்த ஆண்டில் மூதூரில் 45 அதிரடி படையினர் கொல்லப்பட்ட தாக்குதல் உட்பட பல தாக்குதலில் இவர் பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா -

கண்டபடி துப்பாக்கிச் சூடு நடத்தினர்

வவுனியாவில் தொடர்ந்து வான் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர்களின்...

யாக எழுதிக் கொடுக்கப்பட்டதா அல்லது அவரே தவறாக சொன்னாரா எனவும் அந்த எம். பி, கேட்டுள்ளார். 08

### முன்னாள்...

செயலாளர் சிறில் ரணதுங்கா குற்றம் சாட்டியுள்ளார்.

கைதானவர்களில் ஒருவர் முன்னாள் இ. தொ. க. மாவட்டத்தலைவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 08

### வலந்தலை...

இக்கிராமத்தில் உள்ள சில வீடுகளும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி நிறுவன வலைத்தொழிற்சாலையில் உள்ள பெறுமதி வாய்ந்த உற்பத்திப் பொருள்கள், வலைகள், நூல்கள் கடுமிச்சேதமடைந்தன.

சம்பவநேரம் இத்தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தயுவதிகள் மயிரிழையில் உயிர்தப்பினர் (18)

### ஆவரங்கால்...

நேரய்வாய்ப்பட்டு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில முகாம் பகுதிகள் துர்நாற்றம் வீசுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 06

### கிளாலி...

பனங்களுக்குக் கூடுதலான பொருள்கள் வந்துள்ளன.

பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது: 10

### இளைஞர்...

போக்குவரத்து விதிகளை மீறிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சைக்கிள் நம்பர் தகடு பதிப்பதிலும் மக்கள் கூடிய கவனம் செலுத்தியதையும் காணமுடிகிறது. (06)

### இடம்...

சேர்ந்த மக்களுக்கே வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி லிங்கி கப்பலில் பொருள்கள் இறக்கப்பட்டு அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்துக்கு வந்ததும், இந்த நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

### 'விவா'...

இரு பென்ரோச் பற்றிகளை வைத்து, பின்னர் லேபல் ஒட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டார் (18)

### மதுரையில்...

எதிர்கொள்ள தாம் தயார் என விழாவில் கலந்து கொண்ட கலைஞர் கருணாநிதி சவால்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### கோப்பாய்...

கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்

கோப்பாய் பிரிவிலுள்ள கோப்பாய் வடக்கு, கோப்பாய் மத்தி, தெற்கு, இருபாலை கிழக்கு இருபாலை தெற்கு, கல்வியங்காடு ஆகிய கிராமசேவையாளர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு இது வழங்கப்படவுள்ளது (06)

### ஹெந்தல...

கா. மாணிக்கவாசகர் ஆகியோரையும் ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்குச் சென்ற இக்கப்பல் அங்கிருந்து உடனடியாக இங்கு திரும்பி வந்தது. (10)


## புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த ஒன்றுகூடலும், ஒளிவிழாவும்

1991 டிசம்பர் 28 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்களும் வெள்ளி விழாவைக் கொண்டாடும் பழைய மாணவ அருட் தந்தையர்களும் விசேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள். பழைய மாணவர்கள் குடும்பத்துடன் இவ்விழாவில் பங்குபற்றுவதை உறுதிசெய்யும் முகமாக தங்கள் பெயர்களை சங்க அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜி. ஆர். இராசசிங்கம்
கௌரவ பொதுச்செயலாளர்

59, புனித பத்திரிசியார் வீதி.
யாழ்ப்பாணம். 1991-12-23 12076


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில்24· 12· 1991இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது